# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :29 January 2026
கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**
Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**



**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# கணினி



# *The Personality of Kings in Religious Literature*

## அற இலக்கியங்களில் அரசர்களின் ஆளுமை

***R.Divyabharathi,*** *phd Research Scholar of Tamil, (Full Time )Reg No - BDU2110632779055, Thanthai Hans Rover College, Perambalur, Affiliated to Bharathidasan University, Tiruchirapalli, Tamilnadu, India.*

***Dr. P.S Selvarani,*** *Guide & Assistant Professor of Tamil, Thanthai Hans Rover College, Perambalur, Affiliated to Bharathidasan University, Tiruchirapalli, Tamilnadu, India.*

**ர.திவ்யபாரதி,** முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம் ), ***Reg No -BDU2110632779055,*** தமிழாய்வுத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி ), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, பெரம்பலூர் ***621220,*** தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர்: பி. எஸ். செல்வராணி**, நெறியாளர், தமிழாய்வுத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி ), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, பெரம்பலூர் ***621220,*** தமிழ்நாடு, இந்தியா.

***Abstract:***

*A government is an organization established to keep a society in order and to regulate its people.The books of law tell about the government that leads society, its morals, and the activities of the country, its people, ministers, soldiers, ambassadors, and spies.The king and the government have various duties. There should not be suffering in a country, if there is suffering from an enemy, the valor and virtue of the king ruling the country will be disturbed. The king who rules the country is the first of all and the life and prosperity of the country will be determined by him. That's why "On the day of the king, the deity will stand".The argument that the king is more powerful than the deity is worth considering. Various opinions have been said in this article that the king is the god, the scepter, the special king, the neutral system of government, the most valiant king.*

***Keywords*** *: Religious Literature, King, God, People*

**ஆய்வுச்சுருக்கம்:**

ஒரு சமுதாயம் ஆனது கட்டுப்பாட்டிற்குள் முறையாக இயங்குவதற்கும் மக்களை நெறிப்படுத்துவதற்கும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே அரசாகும். சமூகத்தை வழிநடத்தவும், அரசை பற்றியும், அவரது ஒழுக்கங்களையும் நாடு, மக்கள், அமைச்சர், படைவீரர், தூதுவர், ஒற்றர் போன்றவர்களின் செயல்பாடுகளையும் நீதி நூல்கள் கூறுகின்றன.அரசனுக்கும், அரசுக்கும் என்று பல்வேறு கடமைகள் உள்ளன. ஒரு நாட்டில் துன்பம் என்பதே இருக்கக்கூடாது. ஒரு வேளை பகைவரால் கேடு ஏற்பட்டால் அந்நாட்டை ஆளும் அரசனின் வீரமும், நற்பண்பும் சீர்குழையும். நாட்டை ஆளும் மன்னன் அனைவருக்கும் முதல்வனாவான். அவனாலேயே அந்நாட்டின் வாழ்வும், தாழ்வும் அமையும். அதனாலேயே '**அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்**' என்ற வழக்காறு அரசனைத் தெய்வத்தைவிட அதிகாரம் உள்ளவனாகக் காட்டுவது எண்ணிப்பார்க்கத்தக்கதாகும். அரசனே தெய்வம், செங்கோல் சிறப்பு, அரசனின் நடுநிலையான ஆட்சிமுறை, வீரம் மிகுந்த அரசன் என பல்வேறு கருத்துக்கள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்** : அற இலக்கியங்கள், அரசன், தெய்வம் , மக்கள்

**முன்னுரை:**

சங்ககாலம் முதலாக தமிழர்களின் வாழ்க்கை அரசியல் வயப்பட்டதாக அமைந்துள்ளது. ஆட்சிமுறைகள் மாறினாலும் அரசியல் மதிப்புகள் பெரும்பாலும் மாற்றமடையவில்லை. அன்று மன்னனுக்கு இருந்த அதிகாரம் அளப்பறியது என்பதோடு கட்டுப்பாடுகள் இல்லாதது. இன்று தலைமை பொறுப்பில் இருப்பவர்களைக் கட்டுப்படுத்த அல்லது பதவி நீக்கம் செய்ய வாய்ப்புகள் உள்ளன. அன்று அத்தகைய நிலைகள் என்றாலும் அரசனையும், அதிகாரத்தில் இருப்பவர்களையும் நல்வழிப்படுத்த ஐம்பெருங்குழு, எண்பேராயம் உள்ளிட்ட அமைப்புகள் இருந்துள்ளன. புலவர்கள் அரசன் தவறு செய்யும்போது தடுத்து நிறுத்தியுள்ளனர். அறம் கூறும் பல தனிப்பாடல்களையும், நூல்களையும் இயற்றி நல்வழிப்படுத்தியதோடு, அரசியல் மதிப்பினைப் பெற்றுத்தரும் செயல்களைத் தெளிவுபடுத்தினர். அவ்வகையில் எழுதப்பட்ட அறநூல்களின் வழி பதிவு செய்யப்பட்டுள்ள அரசனின் மதிப்புகளை ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**அரசாங்கம் :**

அரசாங்கம் என்பது மக்களின் நலன் காக்கவும், தவறு செய்பவர்களை திருத்தவும், நிர்வாகப் பணிகளை செய்வதற்குமான அமைப்பாகும். இதில் சங்க காலம் தொடங்கி இந்தியா சுதந்திரம் அடையும் காலம் வரையில் மன்னராட்சி முறை இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

**" அரசியல் என்பது மனித வாழ்க்கையில் இருந்து பிரிக்க முடியாத ஒரு தத்துவம், கொள்கை என்றும் கூறலாம். அரசியல் என்பது வாழும் முறை அல்லது வாழ்க்கை முறை."*1* (தி. தாமரைச்செல்வி திருக்குறள் காட்டும் தமிழர் சமுதாயம் (குடும்ப அரசு)ப-102)** அரசியல் மனித வாழ்வியலை தீர்மானிக்கும் சக்தி கொண்டதோடு சமுதாய ஒழுக்கத்திற்கும் அதுவே காரணமாக திகழ்கின்றது எனலாம்.

**அரசனின் கடமைப்பண்புகள்:**

அரசனுக்கும், அரசுக்கும் என்று பல்வேறு கடமைகள் உள்ன. ஒரு மனிதனைப் பெற்று அவனை வளர்த்து, அவனைச் சான்றோனாக்குவது எவ்வாறு பெற்றோரின் கடமையோ அதனைப் போன்று ஒரு நாட்டினைப் பாதுகாப்பது அரசின் கடமையாகும்.

**“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**

**சேராது இயல்வது நாடு” (குறள்.734)**

நாடு என்பது வேற்று நாட்டவர்களும் நாடக்கூடியதாக இருக்கவேண்டும். அதனாலேயே அதற்கு நாடு என்ற பெயர் உரியதாக இருக்கலாம். பசியில்லாத செல்வமும், நோயில்லாத ஆரோக்கியமும், பகைவில்லாத வீரமும் பெற்றதாக இருப்பது நாட்டின் வளத்திற்கும், மனித ஆற்றலுக்கும் சான்றாக திகழ்வதாகும்.

**“கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா**

**நாடென்ப நாட்டின் தலை” (குறள்.736)**

ஒரு நாட்டில் கேடு என்பதே இருக்கக்கூடாது. ஒருவேளை பகைவரால் கேடு ஏற்பட்டு நாட்டின் வளமும், நலமும் கெட்டுப் போனாலும் கூட மீண்டும் அங்குள்ள வளத்தை மீட்டுக்கொண்டு வரும் ஆற்றல் இருக்கும் நாடே உலகத்தின் முதன்மை நாடாக இருக்கும். அதற்கு அந்நாட்டை ஆளும் அரசனின் வீரமும், நற்பண்பும், மக்கள் மதிப்பும் காரணங்களாய் அமைந்து வரும்.

நாட்டை ஆளும் மன்னன் உயிராகவும், மக்கள் உடம்பாகவும் இருந்ததைப் புறநானூறு,

**“மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்”2 (புறநானூறு - பா 186)**

குறிப்பிடுகிறது. அத்தகு மதிப்பு உள்ளனவாக மன்னன் இருக்கவேண்டும் என்பது இதன் அடிப்படையாகும்.

**அரசியல் அதிகாரம் :**

அரசியல் இன்று பலவகை பட்டதாக அமைந்துள்ளது அதன் செயல்பாடுகளை ஒட்டி பெயர்களையும் பெறுகின்றதை,

**"அரசியல் என்பது முடிவெடுப்பதற்கான அதிகாரம் (Owner to decide) யார் கையில் இருக்கிறதோ அவர் அரசியல் நிலைப்பாடு இருக்கிறார். அனைவரும் கலந்து பேசி ஒரு முடிவு எடுத்தால் இது சனநாயக (Democracy) அரசியல் என்றும், தனது அதிகாரத்தை பயன்படுத்தி தனிநபரோ, தனிக்குழுவோ முடிவு செய்தால் சர்வாதிகார அரசியல் என்றும் கூறுகின்றோம் "3 (செ.ப.மாலை ராசா,சமுதாயப் பகுப்பாய்வு - ப 71)**என்பதன் மூலம் அறியலாம்.

**மக்களின் தெய்வம் அரசன் :**

நாட்டை ஆளும் மன்னன் அனைவருக்கும் முதல்வனாவான். அவனாலேயே அந்நாட்டினல் வாழ்வும், தாழ்வும் அமையும். அவனது செயல்பாடுகள் அதிகாரம் உடையவை என்பதோடு யாராலும் கேள்விகேட்க முடியாதவை. எனவேதான் மன்னனை '**இறை**' என்ற சொல்லால் குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. 'அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்' என்ற வழக்காறு அரசனைத் தெய்வத்தைவிட அதிகாரம் உள்ளவனாகக் காட்டுவதும் எண்ணிப்பார்க்கத் தக்கதாகும். அதனால் தெய்வமாக வழிபடக்கூடிய மதிப்பு உடையவனாக மன்னன் இருப்பதை,

**"குலமகட்குத் தெய்வம் கொழுநனே, மன்ற**

**புதல்வர்க்குத் தந்தையும் தாயும், அறவோர்க்கு**

**அடிகளே தெய்வம், அனைவோர்க்கும் தெய்வம்,**

**இலை முகப் பைம்பூண் இறை"(நீதி நெறி விளக்கம்.26)**

என்பதால் அறியலாம். குலமகளாக வாழும் பெண்ணுக்கு அவளை மணந்த கணவனே தெய்வம், குழந்தைகளுக்கு அவர்தம் தாயும் தந்தையுமே தெய்வம், கொடுத்து வாழும் இல்லறத்தார்க்கு அடிகளான முனிவர்களே தெய்வம். ஆனால் இப்பூமியில் வாழும் அனைவருக்கும் மன்னனே தெய்வம் என்பது மன்னனது அக்கால அரசியல் மதிப்பை உணர்த்துவதாக அமைவதை அறியலாம். இதனை,

**"அரசன் னுவாத்தியான் றாய்தந்தை தம்மு**

**னிகரில் குரவ ரிவரைத்**

**தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே**

**யாவருங் கண்ட நெறி" (ஆசாரக்கோவை.16)**

ஆசிரியன், தாய், தந்தை, முனிவர்கள் போன்றவர்களுக்கு முதன்மையாக அரசனைக் குறிப்பிட்டுள்ளது முக்கியமானதாகும். இங்கே குறிப்பிடப்பட்டவர்களுள் முதன்மையாக வணங்கக்கூடியவராக அரசனைக் கூறுவது மன்னனின் மதிப்பினை வெளிக்காட்டுகின்றது.

**வளமுள்ள நாடு அமிர்தம் :**

ஒரு நாடு என்பது வளமாக இருந்தால்தான் அந்நாடு பலராலும் பெற விரும்பப்படுகின்ற தன்மை உடையதாக இருக்கும்.

**"நற்பு உடைய நாடு அமிர்து " ( சிறுபஞ்சமூலம், பா -4)**

அமிர்தம் என்பது சாகாவரம் கொடுக்கக் கூடியது. அதுபோல நல்ல வளமான நாடு என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வாய்ப்பினை வழங்குவதால் அந்நாட்டில் உள்ளோர் மகிழ்வாக இருப்பர் என்பதும் ஆயுட்காலம் கூடியவர்களாக இருப்பார் என்பதும் பெறப்படும்.மேலும் ஒரு நாட்டின் வளம் என்பதை வரையறுக்க பல்வேறு கூறுகள் உள்ளன. அவை நிலம் சார்ந்தும், மலை சார்ந்தும், காடு சார்ந்தும், மழை சார்ந்தும், கடல் சார்ந்ததுமான உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைவது ஆகும். இவற்றோடு மனித நடத்தைகளும், அரச செயல்பாடுகளும், நீதி பரிபாலனமும், காவல் தன்மையும், பாதுகாப்பு உணர்வும் அதனை தீர்மானிக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**

**நாட வளந்தரும் நாடு " (குறள் - 739 )**

என கூறுவது உண்மையாகும். ஒரு நாட்டின் வளமும், மதிப்பும் அந்நாட்டை ஆண்ட அரசர்களின் திறமையை வைத்து அக்காலத்தில் மதிப்பிடப்பட்டுள்ளதையும் காண முடிகின்றது.

**செங்கோல் அரசன் — சூரியன்:**

அரசனின் செயல்பாடுகள் தவறானதெனில் பொதுவெளியில் விமர்சனம் செய்யத் தயங்குவர். ஆனால் அவனது செயல்பாடுகளைத் தனியாக விமர்சனம் செய்வர். மக்களின் மனநிலை மாறினால் அரசனின் மீது அவர்கள் கொண்டுள்ள மதிப்பும் மதிப்பற்றதாக மாறிவிடும். எனவே அரசன் எப்போதும் நீதிநெறி தவறாதவனாக இருப்பது அவசியமானதாகும். செங்கோலனாக ஆட்சி செய்ம் அரசன் இவ்வுலகிற்கு அடிப்படையாக அமையும் சூரியனைப் போன்று மதிப்புடையவனாக இருப்பான் என்பதை,

**"செயிர்க்க ணிகழாது செங்கோ லுயரி**

**மயிர்க்கண் முரசு முழங்க - உயிர்க்கெல்லாம்**

**நாவ லகலிடத்து ஞாயிறனையனாய்க்**

**காவலன் சேறல் கடன்"(பு.வெ.மா.171)**

அரசன் செங்கோலாட்சி புரிதல் அவனுக்கும், அவனைச் சார்ந்த மக்களுக்கும் இனிமையானதாக அமையும். இதனை,

**"கொல்லாமை முன்இனிது கோல்கோடி மாராயஞ்**

**செய்யாமை முன்இனிது செங்கோலன் ஆகுதல்**

**எய்துந் திறத்தால் இனிதென்ப யார்மாட்டும்**

**பொல்லாங் குரையாமை நன்று"**

அரசனின் அருமை அவன் செய்யும் அரசாட்சியின் தன்மையைக் கொண்டே வரையறை செய்யப்படும். அதனால் அதிகமான வரி விதிக்காமல் மக்களின் நலனைத் தன் நலானகக் கருதும் இயல்புடையவனாக அரசன் அமைந்திருப்பது அவனது அரசியலை மதிப்புடையதாகக் கருதச் செய்யும்.

**நடுநிலையான ஆட்சிமுறை:**

அரசன் பொதுநிலையில் உள்ளவன். எனவே அவனுக்கு இன்னார் இனியார் என்ற பாகுபாடுகள் கூடாது. மக்களது செயல்களை அளவிட வேண்டுமே தவிர அவர்கள் யாரென்று பார்த்து அதற்கேற்ப நடக்கக் கூடாது. கண்ணுக்கு எவ்வாறு கண்ணோட்டம் என்னும் பார்வை பெருமை தருமோ அதுபோன்று அனைவரிடமும் நடுநிலையோடு அமர்ந்து அரசு செலுத்தத் தெரிந்தவானக அரசன் இருக்க வேண்டும். அதுவே அவனது ஆட்சியின் சிறப்புக்குக் காரணமாகும் என்பதை,

**“ஆசார மென்பது கல்வி யறஞ் சேர்ந்த**

**போக முடைமை பொருளாட்சி யார்கண்ணும்**

**கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வான்**

**உண்ணோட்ட மின்மையு மில்” (நான்மணி.94)**

என்பதில் நடுநிலையோடு அரசாட்சி செய்யும் அரசனது ஆட்சியில் எத்தகு சீர்கேடும், பற்றாக்குறையும் ஏற்படாது என்பது அரசனின் செயல்பாட்டு மதிப்பினைக் காட்டுவதாகும்.

**வழுவா அரசன் :**

மனிதனது முக்கியமான செயல்களுள் ஒன்று கடமையைச் செய்தல் என்பதாகும். அதைத்தான் மகாபாரதத்தில் பகவனாகிய திருமாலும் வலியுறுத்துகின்றார். நமக்கான நன்மை கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் நமது கடமையை மட்டும் எப்போதும் தவறவிடக் கூடாது. அரசனுக்குள்ள கடமைகள் பலவுள்ளன. அவற்றுள் நீதி தவறாதவனாக இருப்பது ஒழுக்கம் சார்ந்ததாக மட்டுமல்லாமல், நாட்டின் அமைதிக்கும் காரணமாகத் திகழ்வதாகும்.

**“மூன்று கடன் கழித்த பார்ப்பானும், ஓர்ந்து**

**முறை நிலை கோடா அரசும், சிறைநின்று**

**அலவலை அல்லாக் குடியும், - இம் மூவர்**

**உலகம் எனப்படுவார்”(திரிகடுகம்.34)**

மேலேகூறிய பாடலில் அந்தணரின் கடமை, குடிமக்களின் கடமை ஆகிய இரண்டிற்கும் இடையில் நடுநாயமாக அரசனின் கடமையான நீதியைப் பேணுதல் என்பது கூறப்பட்டுள்ளது. சாதியடுக்கில் உயர்வான இடத்தில் வைத்துக் கூறப்படும் அந்தணராக இருந்தாலும், சாதாரண மக்களுள்

ஒருவராக இருந்தாலும்  யார் பக்கமும் சாயாமல் நீதிவழுவா முறையில் அரசன் இருப்பது அவனது அரசியல் மதிப்பினைக் காட்டும். அத்தகைய மன்னனது ஆட்சியின் கீழ் வாழும் குடிமக்கள் எத்தகைய கவலையும் இன்றி வாழ்வார். இயற்கை வளங்களும் அந்நாட்டில் வளம் குன்றாது செழிப்பாக இருக்கும் என்பதைப் பலவேறு இலக்கியச் சான்றுகள்  காட்டுகின்றன.

**அரச மரியாதை :**

அரசன் அளவற்ற அதிகாரத்தை உடையவன் எனவே அவன் வயதில் சிறியவனாக இருந்தாலோ, வலிமையற்றவனாக இருந்தாலோ அதனை முதன்மைப்படுத்தி அவனை இகழாமல், அரசர்க்குரிய மரியாதையை வழங்குவது அவசியமானதாகும் .

**"இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற**

**ஒளியோ டொழுகப் படும்" (குறள் - 698 )**

அரசன் நமது உறவினன் என்றோ, தனது இனத்தைச் சார்ந்தவன் என்றோ அதிகமான உரிமை என எடுத்துக் கொள்பவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக மாறிவிடும். அந்தந்த பதவிக்குரிய மரியாதையை அளித்தல் என்பது அரசியல் அதிகாரத்தினை பொறுத்தது. எனவே அனைவரும் அதனை கண்டிப்பாக செய்யவேண்டும் என்பது கட்டாயமாகின்றது .

**மன்னவன் ஆணைக்கு மாற்றில்லை:**

அரசன் இடும் உத்தரவை எவராலும் மீறமுடியாது. அரசன் இட்ட உத்தரவை பற்றி விமர்சிக்கும் ஆற்றலும், உரிமையும் யாருக்கும் கிடையாது. சிலநேரங்களில் தமிழ்ப் புலவர்களின் வார்த்தைக்கு மன்னன் செவிமடுத்துள்ளான் என்பதற்குச் சான்றாக, '**செவியறிவுறு**' துறை சான்றாகத் திகழ்கின்றது. அரசன் பேச்சுக்கு எதிர்ப் பேச்சு என்பது பெரும்பாலும் இல்லையென்பதை,

**“மன்னவன் ஆணைக்கீழ் மற்றையார் மீக்கூற்றம்**

**என்ன வகையால் செயப் பெறுப? புன்னைப்**

**பரப்பில் நீர் தாஅம் படு கடல் தண் சேர்ப்ப! -**

**மரத்தின் கீழ் ஆகா, மரம்” (பழமொழி.311).**

அரசனது ஆணைக்கு உட்படாத எவரையும் கொல்லும் உரிமை அக்காலத்தில் அரசனுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது. எனவே அக்கால மக்கள் மன்னனின் ஆணையைத் தலைமேல் வைத்துக் கொண்டாடியது மன்னனின் அரசியல் மதிப்பிற்கான காரணமாக அமைவதை உணரலாம்.

***நீதி வழுவாது அரசன்***

அரசப் பதவியென்பது அணிகலன் பதவியல்ல. அது மக்களின் இன்ப துன்பங்களில், வறுமையில், வளத்தில் இரண்டறக் கலந்தது. எனினும் மன்னன் தமது உறவினர்க்கோ, தமது உறவாளனுக்கோ இல்லாமல் நீதியறிந்து நடக்கவேண்டும்.**"மன்னன் தன் அனுபவ அறிவால் குற்றத்தை ஆராய்ந்து எவரிடத்தும் நடுநிலை தவறாது நூலறிவோடும் ஆராய்ந்து நீதி வழங்குவதே செங்கோல் முறையாகும்" 4 (ச.தமிழரசு குறள்நெறி வெண்பா. ப - 65)**என அறிவுறுத்தப்படுகிறது.

**"ஏமம் வேண்டுவோன் முறை செயல் தண்டான்"(முதுமொழிக்காஞ்சி.10;9)**

அரசனின் அதிகாரம் குடிமக்களால் கட்டுப்படுத்தப்படும். எனவே அவனது அதிகாரத்தைத் தாண்டாமல் குடிமக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு செயல்படுவதே நீதிவழுவாமைக்கும், அரசன் பெறும் மதிப்பிற்கும் காரணமாகும். **"அரசர்கள் தமது நாட்டை ஆள்வதில் அறநெறி பிறழாதவர்களாக இருந்தனர். அதனால் ஒரு நாட்டிற்கு அரசனை உயிர் என்று கருதப்பட்டான்" 5 (இந்திய பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு மலர் - ப 162)** அவனது இருப்பும், மதிப்புமே நாட்டின் அடிப்படையாக அமைந்துள்ளது. **"சமன் தூக்கம் துலாக்கோல் "** போல செயல்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் ஒருவருக்கு பாலையும் ஒருவருக்கு நீரையும் கொடுத்ததற்கு சமமாக எண்ணப்படும். நாட்டுப்புறத்தில் இதனை **"ஒரு கண்ணுக்கு வெண்ணையும் மறுக்கண்ணுக்கு சுண்ணாம்பும் "** என்பதாக குறிப்பர்

***குடியுயரக் கோவுயரும்:***

அரசனின் அதிகாரம் அளவற்றது என்றாலும் அரசன் மக்கள் இல்லாமல் அரசாட்சி செலுத்த முடியாது. **"கோனுயறக் குடி உயரும்"** என்பதே தமிழர் பண்பாடு. இதுவே அளப்பறிய அதிகாரம் பெற்றிருந்த மன்னர்களையும் தமது கடமையின் பால் கட்டிப்போட்டதாகும். இதனை,

**"வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்**

**நீர்சான் றுயரவே நெல்லுயருஞ் - சீர்சான்ற**

**தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்**

**ஓவா துரைக்கும் உலகு"(சிறுபஞ்சமூலம்.46)**

குடிமக்கள் வாழ்வு சிறப்பாக அமைந்தால்தான் அரசனின் வாழ்வும் சிறப்பாக அமையும். ஏனெனில் மக்களால் ஆகியதே நாடு. நாட்டை ஆள்வனே மன்னன் என்ற அடிப்படையில் குடிமக்கள் முதன்மையானவர்கள் ஆவர்.

***வீரம்மிக்க அரசன்:***

அரசன் நல்லவனாக இருப்பதோடு வல்லவனாகவும் இருக்கவேண்டும். போரும், பூசலும் அரசனைச் சுற்றி எப்போதும் இருப்பவை அதனால் பகைவரை அடக்கி ஒடுக்கும் ஆற்றல் பெற்றவனாக அரசன் இருக்க வேண்டும். **“பெருமையும் உரனும் ஆடுஉமேன”6 (தொல் - களவியல் நூ - 7)**என்பதற்கேற்ப அவனது திறமை இருந்தால்தான் மக்களிடம் அவனால் மதிப்பினைப் பெறமுடியும்.

**“ஒரு நாட்டிற்கு அடிப்படையானவன் அரசனேயாவான். அவன் உள்நாட்டில் ஏற்படக்கூடிய குழப்பங்களைத் தவிர்க்கும் திறனும், பகைநாட்டுப் படையெடுப்பினைத் தடுத்து எதிர்த்துப் போரிடும் வீரமும் பெற்றிருக்க வேண்டும்”7 (தி. தாமரைச்செல்வி திருக்குறள் காட்டும் தமிழர் சமுதாயம் (குடும்ப அரசு ) ப - 105)** அப்போதுதான் நாட்டைக் காக்கும் கடமையை நிறைவேற்ற முடியும்.

**“பிறன்மனை பின்னோக்காப் பீடினி தாற்ற**

**வறனுழக்கும் பைங்கூழ்க்கு வானசோர் வினிதே**

**மறமன்னர் தங்கடையுள் மாமலைபோல் யானை**

**மதமுழுக்கங் கேட்டல் இனிது” (இனியவை நாற்பது.15)**

அரசன் வலிமையான யானையைப் போன்ற ஆற்றலுடையவனாக இருக்க வேண்டும். யானையின் பிளிறல் எவ்வாறு அச்சத்தை உண்டாக்குமோ அதனைப் போன்று அரசனது குரல் எதிரிகளுக்கு குலைநடுக்கத்தை உண்டாக்க வேண்டும். அவனது பெயரைக் கேட்டளவில் வலிமையான படையும் கலங்கிச் சிதற வேண்டும். அவ்வாறு வீரத்துடன் இருப்பது அரசனது அரசியலில் மதிப்பாக எண்ணப்பெறும்.

**முடிவுரை:**

சங்ககாலத்திலும், அதற்கடுத்து வந்த அற இலக்கிய காலக்கட்டத்திலும் அரசனின் செயல்பாடுகளே நாட்டின் ஆக்கத்திற்கும், அழிவிற்கும் காரணமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது அரசன் அதிகாரமிக்கவனாக இருந்தாலும் அவ்வதிகாரத்தை மக்களின் நலனுக்கும், நாட்டின் நலனுக்கும் பயன்படுத்தினால்தான் அவனது மதிப்பு உயரும் என்பதை உணரமுடிகின்றது. அரச மதிப்புகள் என்பவை சிறப்பானதாக இருப்தை அடிப்படையாகக் கொண்டு அந்நாட்டின் மதிப்பினையும் அறிந்து கொள்ள முடியும்.

**துணைநூற் பட்டியல்:**


1. நீதிநெறி விளக்கம், தமிழ்ப்பிரியன் உரை, சாரதா பதிப்பகம் சென்னை ,பதிப்பு - 5, 2000.
2. புறநானூறு, புலியூர் கேசிகன் உரை, கவுரா ஏஜென்சிஸ், , திருவல்லிக்கேணி ,பதிப்பு - 2, 2006.
3. புறப்பொருள் வெண்பாமாலை, திருஞானசம்பந்தர் , கதிர் பதிப்பகம் திருவையாறு. பதிப்பு - 1

4. தொல்காப்பியம் பொருளதிகாரம் , இளம்பூணரர் உரை ,சாரதா பதிப்பகம், சென்னை , பதிப்பு - 1, 1847.

5. தி. தாமரைச்செல்வி திருக்குறள் காட்டும் தமிழர் சமுதாயம் (குடும்ப அரசு ) முகில் பதிப்பகம், சென்னை.

***REFERENCE :***

*1. Neethineri vilakkam, Tamilpriyan Explanation, Saradha Publishing House, Chennai , Edition -5 , 2000.*

*2. Puranaanooru, Puliyoork kesikan Explanation, Gowra Ajency, Thiruvallikeni, Edition - 2, 2006.*

*3. Purapporul Venbamaalai, Thirunana sampanthar, Kathir Publishing House, Thiruvaiyaaru, Edition - 1.*

*4. Tholkkappiyam (Porul) , Elampooranaar Explanation, Saradha Publishing House, Chennai, Edition - 1, 1847.*

*5.Thirukkural Kaattum Tamilar Samudhayam, T. Thamarai Selvi, (Kudumpa Arasu) , Mugil Publishing House, Chennai.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com